**செய்தி வெளியீடு எண்: 788** **நாள்:22.10.2020**

**<u>இன்று (22.10.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுத்ததின் விளைவாக தமிழகத்தில் இந்நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எந்தளவிற்கு பலன் தந்துள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற நமது அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்நோய்த் தொற்றுப் பரவல் எந்தளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உணர முடியும். இதற்கான முயற்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் முழு ஈடுபாட்டோடு இப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அவருடன், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து இப்பணியில் ஈடுபட்டதன் காரணமாக நல்ல பலன் கிடைத்துள்ளது.

உலகம் முழுவதும் பரவியுள்ள இந்தக் கொடிய நோயை, வல்லரசு நாடுகளே கட்டுப்படுத்த முடியாத இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு அம்மாவின் அரசு தனி கவனம் செலுத்தி ஒரு உயிரைக்கூட இழக்கக் கூடாது என்ற அடிப்படையில் தகுந்த சிகிச்சை

அளித்து உயிரிழப்பு குறைக்கப்பட்டுள்ளது, தொற்றுநோய் ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப் பணியில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, கூட்டுறவுத் துறை, உணவுத் துறை மற்றும் பல துறைகளைச் சேர்ந்த பணியாளர்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். இந்தக் கொடிய நோயிலிருந்து மக்களைக் காக்க வேண்டும் என்பதற்காக பொறுப்புடன் இப்பணியில் ஈடுபட்ட பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உயிரைக்கூட தியாகம் செய்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மறக்க முடியாது. அந்த அதிகாரிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த நேரத்தில் எனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அனைவருக்கும் அரசின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியை இந்நேரத்தில் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க முழுமையான படுக்கை வசதிகளும் போதுமான அளவிற்கு பரிசோதனை நிலையங்களும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அதிகமான பரிசோதனைகள் செய்கின்ற முதல் மாநிலம் தமிழ்நாடு தான். RTPCR Test மூலம்தான் இந்த நோயை துல்லியமாக கண்டுபிடிக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிய ஆலோசனையின்படி, RTPCR Test செய்யப்படுகிறது. மற்ற மாநிலங்களில் RTPCR Test குறைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, RTPCR Test-ஐ முழுமையாக பயன்படுத்தியதன் விளைவாக நாளொன்றுக்கு சராசரியாக **90,000** பரிசோதனைகள் செய்யப்பட்டதன் காரணமாக, நோய்த் தொற்று கண்டறியப்பட்டு உடனடியாக சிகிச்சை அளித்ததால் இத்தொற்று பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது, உயிரிழப்பு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் அரசு எடுத்த முயற்சிக்கு கிடைத்த பலன் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதற்காக பாடுபட்ட அனைவருக்கும் மீண்டும், மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளித்த அறிவுரைகளின்படி காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும்

பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, நோய் அறிகுறி தென்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததன் விளைவாக, இந்நோய்த் தொற்றுப் பரவல் தடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு 70 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, இதுவரை சுமார் 10,225 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 4.77 லட்சம் நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவமனைகளிலும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதுமான படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், புதிதாக மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனைத்து வழிகளிலும் அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தமிழகத்தில் படிப்படியாக குறைந்துள்ளது.

வேளாண் பணிகளுக்கு ஏற்கனவே ஊரடங்கிலிருந்து அரசு முழு விலக்கு அளித்த காரணத்தினால் தமிழ்நாடு முழுவதும் வேளாண் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் அதிக விளைச்சலைக் காணமுடிகிறது. தொழில் துறையை சேர்ந்தவர்களுக்கு 100% ஊரடங்கிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு அனைத்துத் தொழிற்சாலைகளும் சுமார் 90 சதவிகிதப் பணியாளர்களுடன் இயக்கப்பட்டு வருகின்றன.

2015 மற்றும் 2019–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்று காலையில் கூட ஐடிசி நிறுவனத்தின் தொழிற்சாலையை நான் துவக்கி வைத்துள்ளேன். இந்த தொழில் முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் பலன் கிடைத்துள்ளது என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 2015–ஆம் ஆண்டு சென்னையில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஐடிசி நிறுவனத்துடன் சுமார் ரூபாய் 1,170 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, முதல் பகுதி ரூபாய் 820 கோடி

மதிப்பீட்டில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனை இன்று நான் திறந்து வைத்தேன். மற்றொரு அலகில் சுமார் ரூபாய் 350 கோடி மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. அது பிப்ரவரி மாதம் துவங்கப்படும். ஐடிசி நிறுவனத்தில் சுமார் 2,700 நபர்கள் பணிபுரிவதில் சுமார் 2,300 நபர்கள் (85 சதவிகிதம்) முழுக்க முழுக்க கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் பணியாற்றுகின்றனர். இது பெருமைக்குரிய விஷயமாகும்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் பிரதான தொழில் வேளாண்மை. இத்தகைய பின்தங்கிய பகுதியில் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்ற அடிப்படையில் இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே 2015ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, தற்பொழுது இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றது. இதேபோல, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகள் துவங்கியிருக்கின்றன. **இன்றைக்கு உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா நோய்த் தொற்று இருக்கும் சூழ்நிலையிலும் 40,718 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீட்டை ஈர்த்து, அதன்மூலம் 74,212 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இதன் மூலம் 2020ஆம் ஆண்டில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு அம்மாவின் அரசு விரைவாக செயல்பட்டு, புதிய தொழில்களை தமிழகத்தில் உருவாக்குவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.**

மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோதே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என்பதற்காக இரண்டு பகுதிகளாகப் பிரித்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டங்களின் மதிப்பு ரூபாய் 616 கோடி ஆகும். மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தாலும், அம்மா அவர்கள் துவக்கிய திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு தங்குதடையில்லாமல் குடிநீரை வழங்கிய அரசு அம்மாவின் அரசு. அந்தத் திட்டத்தையும்,

மாண்புமிகு அம்மா வழியில் நானே துவக்கி வைத்தேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிக அளவிலான ஏரிகள் தூர்வாரப்பட்டிருக்கின்றன. பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை அம்மாவின் அரசு கொண்டுவந்து அற்புதமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முழுக்க முழுக்க வேளாண் பெருமக்களைக் கொண்டு குடிமராமத்துத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித்தலைவர் வரவேற்புரையில் குறிப்பிட்டதுபோல, சுமார் **45** ஆண்டுகாலமாக காவேரி நதிநீர் பிரச்சினைக்காக நாம் போராடி வந்தோம். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார்கள். அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அம்மாவின் அரசு சட்டப் போராட்டம் நடத்தி விவசாயிகள் மகிழ்ச்சியாக வேளாண் பணிகளை மேற்கொள்வதற்கு உச்ச நீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பைப் பெற்று தந்து, வேளாண் பெருமக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் காவேரி நீர் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை பெற்றுத் தந்துள்ளது.

அதேபோல, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டுமென்று குரல் கொடுத்து வந்த விவசாயிகளுக்கு, அவர்களுடைய எண்ணப்படி, மாண்புமிகு அம்மாவின் அரசு டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அதற்குத் தேவையான உத்தரவையும் வழங்கி, விவசாயிகளை பாதுகாத்த அரசு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்லணை கால்வாயை ரூபாய் **2,664** கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டாளர் வங்கிக் கடன் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மக்கள் எதிர்பார்த்த காவேரி–குண்டாறு திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். துரதிர்ஷ்டவசமாக மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அம்மா அறிவித்த அந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்த இருக்கின்றது. காவேரி–அக்னியாறு,

தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு, வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டமான காவேரி–குண்டாறு திட்டம் புதுக்கோட்டை வழியாகச் செல்கின்றது. இதன்மூலம், புதுக்கோட்டையிலுள்ள நூற்றுக்கணக்கான ஏரிகளில் நீர் நிரப்பப்பட்டு, நிலத்தடி நீர் மட்டம் உயரும், நீர் செறிவூட்டப்படும். இந்தத் திட்டம் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் முடிவடையும். அதன் பின்னர், புதுக்கோட்டை மாவட்டம் ஒரு பசுமையான மாவட்டமாகத் திகழும். வானம் பார்த்த மாவட்டமாக உள்ள புதுக்கோட்டை மாவட்டம் பசுமை நிறைந்த பகுதியாக மாற்றுவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தையும் நானே நேரடியாக வந்து துவக்கி வைப்பேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் உழைக்கும் மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் அம்மாவின் அரசு அதனை செயல்படுத்தி வருகிறது. நான் இங்கு வரும்பொழுதே உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். இந்த மாவட்டத்தில் அம்மா இருசக்கர வாகனம் விண்ணப்பித்த தகுதியான நபர்கள் அனைவருக்கும் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டு இருக்கின்றது. தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கடனுதவியை வழங்க வேண்டுமென்று அனைத்து வங்கிகளுக்கும் அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டு, அவர்களுக்கு வங்கி இணைப்புக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதனால் ஆயிரக்கணக்கான சுய உதவிக் குழுக்களில் இடம் பெற்றிருக்கின்ற மகளிர் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரி கொடுத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா

அவர்கள். அந்த அரசு மருத்துவக் கல்லூரியை நானே துவக்கி வைத்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் அனைத்தும் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. புதிய பாலங்கள் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். புறவழிச் சாலைகள் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லா துறைகளிலும் அம்மாவின் அரசு தனிக் கவனம் செலுத்தி, புதுக்கோட்டை மாவட்டம் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையிலே பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவின் அரசு மக்களின் அரசு. மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

நான் மக்களுக்கு வேண்டுகோளாக வைப்பதெல்லாம், தற்பொழுது படிப்படியாக கொரோனா வைரஸ் தொற்று குறைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அரசு அறிவிக்கின்ற வழிகாட்டுதல்களை முழுமையாக பின்பற்ற வேண்டும். வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். வெளியில் சென்று வீடு திரும்பும்பொழுது கை, கால்களை நன்றாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். இவற்றையெல்லாம் கடைபிடித்தால் நோய்த் தொற்றுப் பரவலை நாம் தடுக்க முடியும். கொரோனா தடுப்பு பணிகளில் பொதுமக்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**